**செய்தி வெளியீடு எண்: 60** **நாள்: 25.01.2013**

## <u>செய்தி வெளியீடு</u>

தமிழகத்திலுள்ள பழங்குடியின மக்களின் நிலையான வளர்ச்சிக்கென பல்வேறு திட்டங்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், நடப்பாண்டில் பழங்குடியினர் வாழும் பகுதிகளிலுள்ள கச்சா வீடுகளை மேம்படுத்துவதற்காக 2 கோடியே 20 லட்சம் ரூபாய், சாலைகளை மேம்படுத்துவதற்காக 5 கோடியே 90 லட்சம் ரூபாய், பள்ளிகளை மேம்படுத்துவதற்காக 2 கோடி ரூபாய் என 10 கோடியே 10 லட்சம் ரூபாய் வனத்துறைக்கும், பழங்குடியினர் நலப்பள்ளிகள், விடுதிகளை சீரமைப்பது மற்றும் மேம்படுத்துவதற்காக 1 கோடியே 50 லட்சம் ரூபாய், குடிநீர் வழங்குதலுக்காக 2 கோடியே 50 லட்சம் ரூபாய், பழங்குடியின மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக 10 கோடி ரூபாய், திறன் மேம்பாட்டு பயிற்சிக்கென 1 கோடியே 40 லட்சம் ரூபாய் என 15 கோடியே 40 லட்சம் ரூபாய், பழங்குடியினர் நலத்துறை இயக்குநருக்கும், கருமந்துறை, கொல்லிமலை, ஜமுனா மரத்தூர், ஆனைக்கட்டி, கூடலூர் பகுதிகளில் பழங்குடியினருக்காக தொழிற்பயிற்சி நிறுவனங்கள் தொடங்குவதற்கு 24 கோடியே 50 லட்சம் ரூபாய் இயக்குநர் வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநருக்கும் என மொத்தம் பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பணிகளை செயல்படுத்த 50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

அரசின் இந்த நடவடிக்கைகள் மூலம் பழங்குடியின மக்களின் வாழ்வாதாரம் நிலை உயருவதற்கு வழிவகை ஏற்படும்.

******

வெளியீடு:- இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9
நாள்:- 25.1.2013.